# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 Feb 2018 Issue - 2


நிறுவன ஆசிரியர் உரை

## இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும்

கிறிஸ்தவ மார்க்கத்தில் எந்த ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண்பாடுகளுக்கு வேதாகமம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துக்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப்பிடித்து வைத்துக்கொண்டு, அதே பொருளைக் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி ஓரம்கட்டி விடுவது தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வரவேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதை போல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள், நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக் குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே, அதைப்பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்.

**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல** (எபே. 2:8,9) என்கிற வசனத்தையும், **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்** என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை, அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று போதிக்கின்றனர்.

**வேறு சிலர்...நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் ; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு 16:15,16) என்கிற வசனத்தையும் **நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்** (அப். 2:38) என்கிற வசனத்தையும் சுட்டிக் காட்டி இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர்.

இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், முழு உண்மை இல்லை. ஒருவர் இரட்சிப்புக்குத் தேவனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார். வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷனுடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும். மாற்கு 16:15,16 மற்றும் அப். 2:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவ கிருபை மட்டும் இரட்சிப்புக்குப் போதும் என்று போதிப்பதும், அதை ஏற்றுக்கொள்வதும் தவறானது. அதே போல சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே இரட்சிப்புக்குப் போதுமானது என்பதும் அர்த்தம்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்கவில்லை. **என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது** என்கிறார் (யோவான் 7:16) அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக்கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ்தலர்களை வழி நடத்தவும், மறந்து போனதை நினைவுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்தார். (யோவான் 14:26; 16:13) அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் இரட்சிப்பைக் குறித்து எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? வேதாகமத்தில் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கும் இரட்சிக்கப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் கவனமாக வாசித்துப் பார்த்தால் அவைகள் (எபே. 2:8-9) க்கும், மாற்கு 16:15,16 மற்றும் அப். 2:38க்கும் ஏற்ற வகையில் தான் நடைபெற்றிருக்கிறது என்று அறியலாம். இயேசு கிறிஸ்து ஒரே வழி, அவருடைய போதனையும் ஒரே போதனைதான்.

இயேசு கிறிஸ்து தம்முடைய மரணத்துக்குச் சற்று முன்பாக அவரைப் பின்பற்றுகிற சீஷர்கள், எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று உருக்கமாக ஜெபித்தார் (யோவான் 17:20, 21). அப்படியானால், அவரைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களும் ஒரே வழியில் நடக்கவும், ஒரே விதமாக இரட்சிக்கப்படவும் வேண்டுவதும் கூட அவசியமன்றோ! ஆகவே, இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் (எபே. 2:8-9) மற்றும் (யோவான் 3:16) ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற தேவ கிருபையும், (மாற்கு 16:15,16) மற்றும் (அப். 2:38) ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள மனிதனுடைய

பங்கும் சந்தேகத்துக்கு இடமின்றி இணைந்து இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பார்த்துக் கொண்டார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எவ்வாறு தேவனுடைய அன்பு, அழிந்து போகிற மானிடருக்காகச் சுரந்தது என்றும், கர்த்தராகிய இயேசு அதை அறிந்து எப்படித் தன்னை அர்ப்பணித்துத் தியாகம் செய்தார் என்பதையும் கேட்டு, உள்ளத்தில் விசுவாசித்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசித்தார்கள் என்று விளக்குகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இரட்சிப்பின் திட்டத்தில் அனைத்து அம்சங்களும் இழையோடுவதைக் கவனியுங்கள்.

பல சமயங்களில், நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமையாமையை மறந்து விடுகிறோம். விசுவாசத்தின் மூலமாக எப்படி ஒரு மனிதன் அந்தக் கிருபையைச் சந்தித்து மறுபடியும் பிறக்கிறான் என்று விளக்கத் தவறி விடுகிறோம். ஆதலால், மக்கள் தேவகிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அது சரி அன்று.

கிருபை என்பது என்ன? கிருபை என்பது நாம் **சம்பாதிக்காத ஓர் சொத்து.** அதைப் பெற்றுக் கொள்வதற்கு நமக்குத் **தகுதி கிடையாது.** அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டியதில்லை. அதைப் பெற்றுக்கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. அதை, ரோமத் திருசபைக்கு அப்போஸ்தலன் பவுல் கீழ்வருமாறு விளக்குகிறார். **கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும்.**

ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிற வரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்படும் (ரோமர் 4:4;6). ஆக, தேவ கிருபை என்பது, இரட்சிக்கப்படுவதற்கு எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவனை இரட்சிப்புக்குள் கொண்டுவர தேவன் பாராட்டுகிற இரக்கம் என்று சொல்லலாம். ஒருவன் பாவமன்னிப்புப் பெற்று இரட்சிப்புக்குள் வர நீதிமானாக இருக்கவேண்டும். ஆனால், எல்லாரும் பாவம் செய்து கெட்டுப் போய் விட்டபடியால் ஒருவருக்கும் அந்தத் தகுதி கிடையாது. பின்னர் ஒருவன் பாவமன்னிப்பு அடைவது எங்கனம்? அதற்கு, தேவனே ஒரு எளிமையான திட்டத்தை வகுத்துத் தந்துள்ளார் என புதிய ஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. அதாவது, ஒரு பாவி, சிலுவை மரத்தில் தொங்கி மரித்த இயேசுவின் வழியாகவே தேவ அன்பையும் தேவனுடைய இரக்கத்தையும் தேவ கிருபையையும் பெற்று, தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்க முடியுமே தவிர, தன்னுடைய நீதியின் கிரியைகளினிமித்தம் அது சாத்தியப்படாது. ஏனெனில், **நம்முடைய நீதி என்பது அழுக்கடைந்த கந்தை** என்று ஏசாயா கூறுவதை (ஏசா.6:6-11). **எல்லோரும் பாவம், செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம்** (ரோமர் 3:23) **நீதிமான் ஒருவனும் இல்லை** (ரோமர் 3:10) என்று கூறி பவுல் அப்போஸ்தலனும் அதை ஆமோதிக்கிறார். ஆகவே, தேவனுடைய கிருபையில்லாமல் தன் சுய முயற்சியால் எந்த ஒரு மனுஷனும் தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக நீதிமானாக முடியாது.

விசுவாசத்துக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள மனிதன் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி இங்கே பேச்சில்லை. அப்படிப்பட்ட செயல்பாடுகள் அவனுடைய இரட்சிப்பை அவனுக்குச் சம்பாதித்துத் தருவதில்லை. அவைகள் தேவனுடைய கிருபையிலும், இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் வைக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடே. அவைகள் அவனுடைய பாவமன்னிப்பை உள்ளடக்கிய தேவ கிருபையையும், இரக்கத்தையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு அவனுக்குத் தேவைப்படுகிற காரியங்களே அன்றி அவைகளே இரட்சிப்புக்குப் போதுமானவைகள் அல்ல.

தேவனால் கொடுக்கப்படுகிற இலவச ஈவாகிய இரட்சிப்பை மனிதன் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் (எபே.2:8,9) கூறுகிற முழுமைக் கருத்து. அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாச் சொல்லியிருக்கலாமே. **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடர் ஏன்? ஆகவே, இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ உதாசீனம் செய்வதோ கூடாது.

ஆனால், ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். கிறிஸ்துவே நம் பாவம் போக்கும் பரிகாரி. இரடசிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது. மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்திற்கு ஏறிப் போகிறது.

தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு மனிதனுக்குள் எவ்விதமான தகுதியும் இல்லை. ஆகவே, தன்னுடைய பாவங்களுக்காக தானே பாவ மன்னிப்புப் பெற முடியாது என்றும், அதைக் கர்த்தருடைய கிருபையே செய்யும் என்றும் புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. **கிருபையின் மூலமாக நீங்கள் இரடசிக்கப்பட்டீர்கள்; இது கிரியையினால் உண்டானது அல்ல** (எபே. 2:8,9) என்கின்ற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே முழுமுதற் காரணமாகிறது. பாவப் பிணியால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் நம்மை விடுவிக்க வல்லவர் இயேசு கிறிஸ்துவே. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே.

ஆகவே, இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது தேவனுடைய ஈவு;

கிரியையினால் அல்ல. ஒருவரும் பெருமை பாராட்டுவதற்கு இடம் இல்லை. எவ்வளவு அருமையான ஏற்பாடு! அவருடைய மகத்தான அன்புக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டாமா? இயேசு கிறிஸ்துவின் சிலுவை வழியாக தேவனுடைய இரக்கமும் கிருபையும் வெளிப்பட்டிருக்கிறதை நீங்கள் உணர முடிகிறதா?

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த எபே. 2:8,9 வசனப்பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கூறுகிறது. வேதாகமம், இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு, இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர்களானால் **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லாம் எவ்வளவு அர்த்தமுள்ளவைகளோ, அதே அளவு **விசுவாசத்தைக் கொண்டு** என்பதும் அர்த்தமுள்ளதே. ஈவைப் பூரணப்படுத்துகிறதற்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது. ஒருவர் கொடுக்க வேண்டும்... மற்றொருவர் பெற்றுக்கொள்ள வேண்டும். பெறுவதற்கு அங்கே ஒருவர் இல்லையென்றால் ஈவு பூரணப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம். ஆனால், மனிதன் விசுவாசத்தின் மூலம் அதைப் பெற்றுக்கொள்ளாதவரை அவன் அதை அடையமுடியாமல் இன்னும் இழந்துபோன நிலைமையிலேயே இருப்பான். விசுவாசம் தான் நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள வகை செய்கிறது. இயேசு கிறிஸ்து, இரட்சிப்பின் நிபந்தனைகளில் மனிதனுடைய பங்கைப் பற்றி மிகவும் தெளிவகாச் சொல்லியிருக்கிறார். அதைக் குறைவாக மதிப்பிட்டு தவறு செய்து விடாதபடி தேவன் காத்துக் கொள்வாராக!

**விசுவாசத்தைக்கொண்டு** என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? விசுவாசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிற ஒரு கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டு மற்ற வசனப் பகுதிகளை புறக்கணித்துப் போடுவதா? விசுவாசத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட எல்லா வசனப்பகுதிகளையும் படித்து ஒன்றோடொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையில்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக்கொடுத்தல், என்பவைகளின் பொருளை சரியாக விளங்கிக் கொள்ளாமற்போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும்.

தேவனுடைய பங்கு என்பதற்கு எபே.2:8,9-ஐ பயன்படுத்தினோம். அவ்வாறே மனிதனுடைய பங்கு என்பதற்கும் அதைப் பொருத்திப் பார்ப்போம். ஏனெனில், அது மனிதனுடைய விசுவாசத்தைக் குறித்தும் பேசுகிறது.

தேவன் நமது இரட்சிப்புக்கு எவ்வளவோ செய்திருந்தபோதிலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. முதலாவது, நாம் **இரட்சிப்பின் வேர்** எது என்று கண்டுபிடித்து பின்னர் **இரட்சிப்பின் கனியைத் தேட** வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி. ஆனால், நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. இப்பொழுது நமக்குக் கருத்து வேற்றுமை எங்கே இருக்கிறது? யோவான் 3:16, மாற்கு 16:16 லும் உள்ள விசுவாசிக்கிறவன் என்ற வார்த்தையின் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இந்த வார்த்தைக்கு நம்பு, சார்ந்துகொள் என்று பொருள் கொள்ளலாம். நாம் இரட்சிக்கப்பட கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அதற்கு நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். பாவ நிவாரண பலியாகிய கிறிஸ்துவின் மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோம் என்று பொருள். விசுவாசம் கேள்வியினாலே வரும் ; கேள்வி தேவனுடைய வனத்தினாலே வருகிறது (ரோமர் 10:17).

விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது. செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் ஆவியில்லாத சரீரம் என்று விளக்குகிறது (யாக். 2:26). ரோமர் 4:3-ல் **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது** என்கிறது. ஒரு குழந்தையை ஈன்றெடுப்பதற்குரிய சரீர பெலன் சாராளுக்கு அற்றுப்போன பின்பு, சாராள் மூலமாக ஓர் ஆண் மகனைத் தருவேன் என்று சொன்ன போது, மற்ற கட்டளைகளைப் போலவே இதுவும் அவனுக்குச் சோதனையாய் அமைந்தது. ஆனால், ஆபிரகாம் தன் விசுவாசத்தில் உறுதியாக இருந்து வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்தான். அவனுடைய விசுவாசம் உறுதியுள்ளதாகவும், உயிருள்ளதாகவும், தேவனுடைய எந்தக் கட்டளைக்கும் கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. பின்னர், ஒரு கட்டத்தில் ஈசாக்கைப் பலியிட தேவன் கட்டளையிட்டபோது, நாம் அவருடைய விசுவாசத்தின் கனியைக் காணமுடிகிறது. (எபி. 11:17-19) மரித்தோருக்கு ஜீவனைக் கொடுக்கிற தேவனிடத்தில் ஆபிரகாம் விசுவாசம் வைத்தான். அதனால் ஈசாக்கைப் பலியிடத் தயங்கவில்லை. அவனுடைய விசுவாசம் செயல்படாததாக இருந்திருந்தால் அது தேவனுக்குப் பிரியமாய் இருந்திருக்காது.

**விசுவாசத்தை கொண்டு** என்ற சொற்றொடரில் மனந்திரும்புதலும் அடக்கம். **அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது** என்று இயேசு சொன்னார் (லூக். 24:47). சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் தேவனுடைய கிருபையை எவ்வாறு அடைந்து பாவ மன்னிப்புப் பெறுவது என்று பேதுரு கூறினார்.

**பாவ மன்னிப்புகென்று, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்** (அப். 2:38).

மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து நின்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் நோக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று உணர்வதாகும். **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்** (கொரி. 5:21) மனிதன் இயேசுவின் இரத்தத்தின் மேன்மையையும், வல்லமையையும் உணராவிட்டால் மனந்திரும்ப மாட்டான். அவன் சிலுவையண்டையில் வந்து, இயேசுவின் கால்களிலும், கைகளிலும் அடிக்கப்பட்ட ஆணிகளின் சத்தத்தைக் கேட்டு, அவருடைய வேதனையின் பெருமூச்சின் உஷ்ணத்தால் மனமுருகி ஆண்டவரே! என் மேல் இரக்கமாயிரும் என்று கதறுவான். விசுவாசத்தைக் கொண்டு என்ற சொற்றொடரில் அறிக்கையிடுதலும் அடக்கம். கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்; இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10:9-10).

பின்னர் ஞானஸ்நானம் : இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். ஆனால், **விசுவாசத்தை கொண்டு** என்பதை மறந்து விடக் கூடாது. நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்ய வேண்டும் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** (மாற்கு 16:16) ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்தனை வேதனை! சிலுவை இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதேபோல், விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை. ஞானஸ்நானத்தில் நாம் அடக்கம் செய்யப்படும்போது நாம் வெளிப்படையாகவும், அடையாளமாகவும் பாவ மன்னிப்புக்கென்று அவருக்குள் மரிக்கிறோம் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். நாம் ஞானஸ்நானத்தின்போது நம்முடைய பழைய பாவமனுஷனை அடக்கம் செய்து, உயிர்த்தெழுத லினால் அவருடைய சாயலில் இணைக்கப்படுகிறோம். ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது (அப். 2: 38). ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய மரணத்தினாலும் இரத்தத்தினாலும் தான் நம்முடைய பாவங்களுக்குரிய பிராயசித்தம் கிடைக்கும்.

ஞானஸ்நனம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்தனை மகிழ்ச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஆவியினாலும், ஜலத்தினாலும்

பிறக்கிறோம். கீழ்ப்படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம். எப்படி ஆபிரகாம் தேவனை நேசித்து கீழ்ப்படிந்து தேவனைக் கனப்படுத்தினாரோ, அவ்வண்ணமாக நாமும் செய்கிறோம். ஆனாலும் நாம் இரட்சிப்பைப் பற்றி பிரசங்கிக்கும்போது, தேவனுடைய கிருபையிலிருந்தும், கிறிஸ்துவினுடைய சிலுவையில் இருந்தும் தொடங்க வேண்டும்.

மாற்கு 16:15-ல் விசுவாசமும் ஞானஸ்நானமும், சொல்லப்பட்டதற்கு முன்பு, பூலோகம் எங்கும் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல். ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். இது தான் மக்களுடைய மனதை மாற்ற வல்லது. தேவனுடைய அன்பும் கிறிஸ்து தம்முடைய இன்னுயிரை நம்முடைய பாவங்களுக்காக விட்டதும் தான் மக்களுடைய உள்ளத்தைத் தொடும். அதனாலன்றே, **நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்** என்றார் இயேசு (யோவான் 12:32). அப்பேஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும், அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் உருக்கமாகவும், உள்ளத்தைத் தொடும் வகையிலும் பிரசங்கித்தார். **நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார், என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள்** என்று கூறியதைக் கேட்டு சகோதரரே நாங்கள் என்ன செய்ய **வேண்டும்,** என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர் (அப். 2:36,37).

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக்கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறைவேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது. அந்த ஒன்று கிறிஸ்துவின் வசனமே (யோவான் 12:48). ★

**ந**மது திருமறை ஆசான் மாத இதழின் **நிறுவன ஆசிரியரும்,** எனது தகப்பனாருமாகிய பெருமதிப்பிற்குரிய சகோ. E.Z. **செல்வநாயகம்** ஐயா அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்து **9.2.2018** உடன் **25 ஆண்டுகள்** நிறைவடைவதால், அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

– ஆசிரியர்

# பரிசுத்த ஆவியின் வரங்கள்

Bro. J.C. சோட்

பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பற்றியும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி பற்றியும் நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்போது, அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்கள் பற்றி நாம் பார்க்கலாம்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டபின், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்கள், அப்போஸ்தலர்கள் மூலம், கொடுக்கப்பட்ட கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர். கர்ததருக்குக் கீழ்ப்படிந்த மற்ற அனைவரும் நமது நாட்கள் வரையிலும், கர்த்தர் மீண்டும் வரும் நாள் வரையிலும் கூட, பரிசுத்த ஆவியின் வரங்களை அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றிருக்கின்றனர் அல்லது பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2-ம் அதிகாரத்திற்கு நாம் திருப்பிக்கொள்ளும்போது, யூதர்களின் பண்டிகையாகிய பெந்தெகொஸ்தே நாளிலே, உலகின் நாலா திசைகளிலிருந்தும் யூதர்கள், கூடி வந்திருந்த வேளையில், அப்போஸ்தலர்கள் எவ்வாறு எருசலேமிலே தங்கியிருந்தனர் எனக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வேளையில் தான், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்கள் அந்நிய பாஷைகளில் உண்மையிலேயே, அங்கு அன்று கூடியிருந்த மக்களின் பாஷைகளிலே, பேசத் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்து, கூடியிருந்த திரளான மக்கள் கூட்டத்திற்கு உயிர்த்தெழுந்த கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றி பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் போதித்தார்கள். தொடர்ந்து, வசனம் கூறுகிறது. **இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து : சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்** (அப்.2:37,38) என்றான்.

கர்த்தரின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்கள் அகன்றிட திருமுழுக்குப் பெற்றனர் என்றும், பின் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றார்கள் என்றும் இந்த வசங்களில் நாம் காண்கின்றோம். இது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்கள்.

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கிலிருந்தும், அப்போஸ்தலர்கள் கொடுத்த, கைகளை வைத்துத் தரும் அளவிலான பரிசுத்த ஆவியிலிருந்தும், பரிசுத்த ஆவியின் வரங்கள் மாறுபட்டது என்பதை அறிய வேண்டும். இவற்றைப் பற்றி வேத வசனங்களில் படிக்கும்போது அந்தந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்து, ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து மாறுபட்டது என்பதைப் பார்க்கலாம். உதாரணமாக, அப். 2:1-4ம் வசனங்களில், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை சில சீடர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்தனர் எனக் காண்கிறோம். அப். 2:38-ம் வசனத்தில், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, கர்த்தருக்குக் கீழ்ப்படிய இருக்கும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியின் வரங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தது என்றுள்ளது.

மீண்டும், சீடர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்களும், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை என்பதை அப். 6ம் அதிகாரத்தில் நாம் பார்க்க முடிகிறது. இல்லாவிடில், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் பெற்றுக்கொள்ளத் தேவை இருந்திருக்காது என்றபோதிலும், அவர்கள் நற்சாட்சி பெற்ற நல்லவர்கள் என்றும், பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்தவர்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள் என்று சொல்லப்பட்டதின் அர்த்தம் என்ன? ஒன்று நிச்சயம் : அற்புதங்கள் செய்யும் வல்லமை, அந்நிய பாஷைகளில் பேசுவது, இன்னும் இது போன்ற விசேஷ வரங்களை அவர்கள் பெற்றிருக்கவில்லை!மாறாக, அற்புதங்கள் செய்யமுடியாத அளவிலான பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றிருந்தனர் என்று தான் அதற்கு அர்த்தம். அதை அவர்கள் எப்போது பெற்றனர்? அப். 2:38-ம் வசனத்தின் படி, தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தபோது, ஒவ்வொருவனும் தனது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட, கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது அடையும் அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைத்தான் அவர்கள் பெற்றனர். வேறு விதமாகச் சொன்னால், கர்த்தருக்கு ஒருவன் இன்று கீழ்ப்படியும் போது பெற்றுக் கொள்ளும் அதே அளவிலான ஆவிதான் அது.

போதிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட பின்பும், ஏன் தொடர்ந்து போதித்தார்கள் என விளக்கம் கேட்பதற்காக, எருசலேமில் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் கொண்டு வரப்பட்டபோது, பிரதான ஆசாரியனுக்கும் அவனோடிருந்த பிறருக்கும் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். **...மனிதர்களுக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன்**

**எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப் படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்** (அப்.5:29-32). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. கீழ்ப்படிவோர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் தாமே கொடுக்கப்படுகிறார் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். அவ்வாறு, கீழ்ப்படிந்தவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் தாமே கொடுக்கப்பட்டால், கிறிஸ்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் தாமே வாசம் செய்ய வேண்டும்.

தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதினார் : **அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்தி சொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ...தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனிதரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான். சகோதர சிநேகத்தை குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டியதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் படிக்குத் தேவனால் போதிக்கப் பட்டவர்களாயிருக்கிறீர்களே** (1தெச.4:1-9). இப்பகுதியில், தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களாகவும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் இருப்பதால், பவுல் அவர்களை உற்சாகப்படுத்தி, பரிசுத்தமாகவும், பரஸ்பர அன்புடனும், மரியாதையுடனும் இருக்கவேண்டுமெனக் கூறுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தில், பவுல் கிறிஸ்தவர்களிடம் பொதுவாகப் பேசி கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி பேசுவதின் மூலம் அவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர் எனக் காட்டுகிறார். அது பரிசுத்த ஆவியின் வரங்கள் அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான ஆவி. இதை நான் மீண்டும் மீண்டுமாகக் குறிப்பிட்டுக் கொண்டேயிருப்பதின் காரணம் என்னவென்றால், அப்போஸ்தலர்களைப் போல அற்புதங்கள் செய்யும் வல்லமையுடன் ஆவியைப் பெறுவதற்கும், அவர்கள் கைகளை வைத்துக் கொடுத்ததற்கும், அற்புதங்கள் செய்ய இயலாத அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் ஒரு தெளிவான வித்தியாசம் இருப்பதைக் காட்டவே.

கொரிந்து கிறிஸ்தவர்களிடம் பவுல் கூறினார் : **நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் ; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (கொரி.3:16,17). மீண்டுமாக, அவர் கூறும்போது, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்திற்கு கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்** (1கொரி. 6:19,20) என்றார். இப்போது நிச்சயமாக கொரிந்து பட்டணத்தார் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை. எனவே, அவர்கள் அற்புதங்களைச் செய்ய முடியவில்லை. வேறு என்ன முடிவுக்கு நாம் வர இயலும்? பின்னர், அவர் யாரிடம் பேசிக்கொண்டிருந்தார்? அங்குள்ள கிறிஸ்தவர்களிடையே பொதுவாக, பேசிக் கொண்டிருந்தார் என்றாலும், பரிசுத்த ஆவி அவர்களிடம் வாசம் செய்வதாக அவர் கூறினார். எந்த அர்த்தத்தில் அவ்வாறு சொன்னார்? அற்புதங்கள் செய்ய இயலாத பரிசுத்த ஆவியின் வரம் என்ற அர்த்தத்தில் தானே கூறினார்.

ஒரு கிறிஸ்தவனிடம் பரிசுத்த ஆவி அற்புதங்கள் செய்ய முடியாத அளவில் எவ்வாறு வாசம் செய்ய முடியும்? எவ்வாறு கிறிஸ்து நம்மில் வாசம் செய்கிறாரோ அப்படித்தான் (கொலோ.1:27); தேவன் வாசம் செய்வதைப் போலவும் (எபே. 4:6) நாம் கிறிஸ்துவிலும் தேவனிலும் வாசம் செய்வது போலவும் தான் (ரோமர் 6:3, கலா. 3:26,27).

இந்தப் பாடத்தில் நான் வலியுறுத்திக் குறிப்பிடுவது என்னவென்றால், எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகின்றனர். ஆனால், அது அற்புதங்களைச் செய்ய இயலாத அளவிலான வரங்கள். வேறுவிதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் வரமானது, கிறிஸ்தவனில் தங்கி வாசம் செய்யும் ஆவி. அற்புதங்களைச் செய்யும் எந்த வல்லமையையும் அது அவனுக்குத் தருவதில்லை அல்லது புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆவியின் வார்த்தைக்கு விரோதமாக அவனை வழி நடத்துவதில்லை. ★

---

**நேரம்**

நேரம் என்பது நித்தியத்தின் இடைவேளை அல்ல.
ஏனென்றால் நேரத்திற்கு ஆதியும், அந்தமும் இல்லை
நேரத்தின் கால அளவு நூறுகோடி வருடங்களாக
இருந்தாலும் அது முடிவே இல்லாத கரையையுடைய
நித்திய கடலில் ஒரு சிறு கூழாங்கல்லாகத் தான் இருக்கும்.

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமைகளைக் கற்றுத் தருதல்

Sis. Betty Choate / Sis. ரேச்சல் இராஜநாயகம்

**அ**ற்புத படைப்பான தொலைக்காட்சியின் மூலம், நாம் நம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையிலிருந்த படியே, பூமியின் நெடுந்தொலைவு முனைக்குப் பயணம் செய்யும் வாய்ப்பைப், பெற்றுள்ளோம்.

நான் அப்பேற்பட்ட ஒரு பயணத்தை சமீபத்தில் மேற்கொண்டேன். பாதுகாப்பற்ற அந்தப் பயணத்தை, நீதிக் கதைகளுக்குச் சொந்தப் பூமியாகிய **லடாக்** என்ற இடத்துக்கு மேற்கொண்டேன். அங்கே பல நூற்றாண்டுகளாகியும், இன்னும் மாறாத பழக்கங்கள் வழக்கத்திலிருப்பதைக் கண்டேன்.

அந்த மலைவாழ் மக்கள், தாங்கொண்ணா துன்பத்தையும், எதையோ இழந்த நிலையோடு இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு விசித்திரமான இடம்! என்ன ஆச்சிரியமான இடம்! என்று எந்த ஒரு பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்து பார்வையிடுவது என்பது கடிகாரத்தைத் தலைகீழாக ஓடச்செய்வது போன்றது. கட்டாயமாக வெளியே உள்ள மக்கள் இங்கு வந்து, இந்த அமைதியான கலாச்சாரம் கொண்ட மக்களை, மற்ற இருபத்தோராம் நூற்றாண்டின் நாகரீகம் கொண்ட வாழ்க்கையைப் போல மாற்ற மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், இங்கே மனிதர்கள் எந்தவொரு வசதியும், மருத்துவரும், மருந்துகளும், தங்களுடைய அன்றாட கடினமான வேலையைச் சுலபமாக்கித் தர எந்தவொரு இயந்திரமும் இன்றி வாழ்ந்தும் செத்தும் கொண்டிருக் கிறார்கள். இதிலும் கொடுமை என்னவென்றால், தேவனுடைய சுவிசேஷம் இங்கு சென்றடை யாதிருத்தல் இன்னும் துக்கமான விஷயமாகும்.

பெரும்பாலும், சீனாவில் வசிக்கும் மக்கள் புத்தமதத்தைச் சார்ந்தவர்களாகவே உள்ளனர். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் புத்தமதச் சடங்குகள் சம்பந்தமாகவே சுழன்று கொண்டுள்ளது.

பொதுவாக வழக்கத்தில் இல்லாத ஒரு பழக்கம் இங்கே காணப்படுகிறது. குடும்பத்தில் உள்ள தலைச்சன் மகன், அல்லது பிரியமான மகன் அவனுடைய சிறு வயதிலிருந்தே, பல சமயங்களில் பிறந்ததில் இருந்து கூட, புத்த மதத் துறவி ஆவதற்காக பிரித்தெடுக்கப்பட்டு விடுகிறான். இந்தக் குழந்தைகள், தாய்களுக்கு

முன் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமையோடு வளர்க்கப்படுகின்றனர். சிறு பையன்களாக இருக்கும் போதே அவர்கள் துறவி மடத்திற்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து பயிலுகின்றனர்.

எப்படி இந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறார்கள். அவர்களும் தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்குச் செவி சாய்க்கிறார்கள்? என்பது நமக்கு கேள்வியாக இருக்கிறது.

லடாக்கில் எப்படியாவது ஒரு துறவியாவது வரவேண்டும் என்ற ஒரு மன கிளர்ச்சியும், மனதார உய்த்து உணர்ந்து செயல்பட்டதே இதற்கு காரணம் என்பது தான் இதற்கான சரியான பதில் ஆகும். இப்பதவி இரண்டு விசேஷ நபர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முதற்பிறந்த மகன், அதிலும் விசேஷமாக மிகவும் நேசிக்கப்பட்ட மகன்! ஒரு குழந்தையானது, சிறுவயதிலிருந்தே தனக்கென்று சிறந்த ஒரு பொறுப்பு உண்டு என்பதை அறிந்து, தன் வாழ்க்கையை அர்ப்பணித்தும், பணியையும் உணர்ந்து வளருமாறு கற்பிக்கப்படும் பொழுது தான், இவ்வாறு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வளர்க்கப்படுவதை உணர்ந்து அதைப் பற்றிய பெருமையும் படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் தன்னை மற்ற குழந்தைகளை விட சற்று அதிக அளவில் மதிக்கிறார்கள் என்ற முழு நம்பிக்கையும் அதன் இருதயத்தில் ஏற்படுகிறது. அவன் கடவுளுக்காகத் தன் குடும்பத்தின் சார்பில் சேவை செய்வதால் அவன் விசேஷித்தவன் என்ற பெயரைப் பெறுகிறான்.

இந்த விதமான கலாச்சாரமானது, லடாக்கில் எத்தனை குடும்பங்கள் உள்ளதோ அத்தனை புத்த துறவிகள் உள்ளனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆனால், அதற்கு நேர்மாறாக, இன்றைக்கு உலகிற்கு ஆசீர்வாதமாக இருக்கும் வகையில் ஊழியர்கள் என்ற முறையில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே உள்ளனர். இதைப் பார்க்கும்போது, மிக முக்கியமான ஒரு கேள்வி எழும்புகிறது. கிறிஸ்தவக் குடும்பங்களில் ஆவிக்குரிய சேவை செய்யவும், போதிக்கவும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியனாக இருந்து செயல்படவும் ஏன் மிகக் குறைந்த இளைஞர்களே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக் கின்றனர்?

இதற்கு, பதில் என்னவென்று பார்த்தால், இந்த மாதிரியான அர்ப்பணிப்பு பற்றி பெற்றோர்களும், சபையும் செயல்படும் விதமே காரணமாகும். நம் பிள்ளைகள் சிறுவயதா யிருக்கும்போதே வெற்றி உள்ளவனாக வரவேண்டும் என எதிர்பார்த்து, அவர்களுக்கு அதை போதிக்கிறோமோ? வெற்றியுள்ளவன் என்கிறபொழுது, அதிகமாக சம்பாதித்தால், நீ மிகவும்

பாக்கியசாலி என்று சொல்லியிருக்கிறோமோ? அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசும்போது, நீ ஒரு மருத்துவராக, வக்கீலாக, வங்கிக் கணக்கராக, ஆசிரியராக வரவேண்டும் என்று கூறிவிட்டு, ஒரு போதகராக வரவேண்டும் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுவதுடன், அதைப்பற்றி குறைத்து மதிப்பிட்டும் பேசியுள்ளோமா? முழு நேர ஊழியர்களை ஏதோ அவர்கள் மூன்றாந்தர கிறிஸ்தவர்கள் என்றும், கூலிக்காக வேலை செய்கிறவர்கள் என்றும் மதிப்பே இல்லாத ஒரு வேலை செய்கி றார்கள் என்றும் கூறியுள்ளோமா?

ஒருவேளை, நம்முடைய பிள்ளையோ, பையனோ ஒரு ஊழியனை திருமணம் செய்கிறார்களென்றால், அதை நாம் தடை செய்கிறோமா? அவர்கள் பெரியவர்களாகி, வெளிநாடுகளுக்குச் சென்று, மிஷினரிப் பணி செய்ய கனவு கண்டு கொண்டிருப்பார் களானால், நாம் அதற்கு எதிராக செயல்படுகிறோமா?

முதலாவதாக, அவர்கள் உலகக் கல்விகளிலே சிறந்து விளங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்? ஒருவேளை, அவர்கள் கணிதம், வியாபாரம், இசை, கலை, விளையாட்டு போன்ற காரியங்களில் சிறு வயதிலிருந்தே அவன் திறமை கொண்டவனாயிருந்தால், அதையே தொடர்ந்து செய் என்று கூறுகிறோமோ? ஊழியம் செய்வதில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லை என்று அவர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறோமா?

இன்றைக்கு நம்மில் வெகு சில பிள்ளைகளே ஊழியர்களாக வருவதற்குக் காரணம். நாம் இதன் சிறப்பினை அவர்களுக்கு எடுத்துக் காட்டாததேயாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்காரனாக ஒருவன் வேலை செய்ய வேண்டும் என்று நம்புவதைக் காட்டிலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்த மதத்திலேயும், புத்த சிஷ்யனாக வேலை செய்வதிலும் கௌரவமும், அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனரே!

நம்முடைய எண்ணத் திலே பின் என்னதான் தவறு செய்து கொண்டுள்ளோம்? நம்முடைய வலியுறுத்தலில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய முன்னுரிமைகளில் என்ன தவறு செய்து கொண்டிருக்கிறோம்?

பழைய ஏற்பாட்டு கட்டளையில் கூட தேவன் சொல்லும் போது, **இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும், மிருக ஜீவன்களிலும் கர்ப்பந் திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது** என்றார் (யாத்.13:2). அதைவிட சிறந்த உடன் படிக்கையான புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்துவரும் நம்மிடம் அவர் குறைந்ததையா எதிர்பார்ப்பார்?

இந்தக் கட்டுரையை வாசிக்கும் என் அன்பிற்குரிய தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமையை கற்றுக்கொடுத்தலில் நம்முடைய

பங்கு எவ்வாறு உள்ளது? இந்தக் கட்டுரை நம்முடைய மனதிற்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றே நம்புகிறேன். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய **உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்** என்றதில் நாம் எந்த அளவு? நம்மை ஈடுபடுத்தி யுள்ளோம். இன்றைக்கு நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகன், மகள் கம்ப்யூட்டர், விஞ்ஞானம் இவைகளில் சிறந்து, வெளிநாடு சென்று அதிக பணம் சம்பாதித்துப் பேரோடும், புகழோடும் வாழ வேண்டுமென்று அதற்கு தங்கள் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த லடாக்கில் உள்ள நிலையைப் பார்க்கும்போது உண்மையாகவே, அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. வீட்டுக்கு ஒரு புத்தத் துறவி! துறவி!! என்ன ஆச்சர்யம்! நம்முடைய குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை ஊழியனாக வருவதற்கு நாம் சிந்தித்திருக் கிறோமா? அதற்காக முயற்சி எடுத்திருக்கிறோமா? ஜெபிக் கிறோமா? நாமும் அதற்காக முன் வருவதில்லை. அப்படியே முன் வந்து தங்களை ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை.

அருமையானவர்களே! இந்த உலகின் காரியங்கள் அனைத்தும் இந்த உலகோடு முடிந்து போகக்கூடியவைகள். நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய முறையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு வசனம், ஜெபம் இவைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போஸ் தலனாகிய பவுல், தான் ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கநுபவி** என்கிறார். நாமும் நம்முடைய பிள்ளைகள் தேவனுக்காக பாடுபடுவதற்கு, பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கர்த்தருடைய பணி செய்ய முழுமனதோடு அர்ப்பணிக்க வேண்டும். இதை வாசிக்கும் தாய்மார்களே சிந்திப்பீர்களா? சிந்தித்து செயல்பட தேவன் உதவி செய்வாராக! ஆமென்! ★

## வேதாகமத்தில் முதலாவது

- ★ நான்கு சுவிசேஷங்கள். **மாற்கு** தான் **முதலாவது** எழுதப்பட்ட சுவிசேஷம்.
- ★ வேதாகமத்தில் **முதல் உவமை** நியாயாதிபதிகள் 9:8-15 ல் உள்ள **மரங்கள்** உவமை.
- ★ தேவன் மனிதனிடம் கேட்ட **முதல் கேள்வி** என்பது நீ எங்கே இருக்கிறாய்?



வாலிபர் பகுதி

# நல்ல நண்பர்

சகோ. பென்னி மார்ட்டீன்

**வா**லிபர்களாகிய உங்களுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாதந்தோறும் மறக்காமல் உங்களை வாலிபர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் சந்தோஷப்படுகிறேன். பொதுவாகவே, வாலிபர் களாகிய நீங்கள் நட்பு வட்டாரத்தை அதிகமாக விரும்புவீர்கள். நல்ல நண்பன் உங்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். அப்படி ஒரு நண்பன் கிடைப்பான் என்று சொன்னால் என்ன விலை கொடுக்கவும், எதை வேண்டுமானாலும் இழக்கவும் நீங்கள் தயாராக இருப்பீர்கள். இன்றைய நாட்களில் நட்பு என்பதற்கு வாலிபர்கள் கொடுக்கும் அர்த்தம் வேறு. அதாவது, நல்ல நண்பன் என்பவன் தன்னோடு சினிமா பார்க்க வரவேண்டும், தன்னோடு கெட்ட பழக்கங்களில் ஈடுபட வேண்டும் என்று அநேக வாலிபர்கள் நினைக்கின்றனர். இன்று நிலைமை என்னவென்றால் நாம் யாரையெல்லாம் நல்ல நண்பர்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் நம்முடைய நெருக்கடியான நேரங்களில் நம்மைவிட்டுப் பிரிந்து சென்று விடுகிறார்கள் அல்லது நம்மோடு நட்பு வைத்துக்கொண்டே உதவிசெய்ய மறுக்கிறார்கள். இது போன்ற வேளைகளில் வேதனையின் காரணமாக நம் உள்ளம் உடைந்து போகிறது. எனவே தான், நம்மீதுஅக்கறை கொண்டு உண்மையான அன்பு செலுத்தி நமக்காக உயிரையே கொடுத்த இயேசுவை நம்முடைய நண்பராக்கிக்கொள்ள வேண்டும். அவர் எந்தச் சூழ்நிலையிலும் நம்மைக் கைவிடவே மாட்டார். அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். சரி, இயேசு கிறிஸ்து நமக்குச் சிறந்த நண்பர் என்பதை பல விதங்களில் நாம் பார்க்கலாம்.

**1. அவர் மரித்தோலிருந்து எழுந்து, இப்பொழுது எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கிறார்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக வாழ்ந்து பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தார் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆனால், கிறிஸ்தவம் இயேசுவின் கல்லறையில் முடிவதில்லை! இதுதான் கிறிஸ்தவத்தை மற்ற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

கிறிஸ்தவர்கள் மரித்த ஒரு தலைவருக்கு சேவை செய்வதில்லை. இயேசுவின் சீடர்கள் இயேசுவின் கல்லறைக்கு வந்து அது காலியாக இருப்பதைக் கண்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன் பின்பு தான் இரண்டு தேவ தூதர்கள் அவர்களிடம், **உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்றார்கள்** (லூக்கா 24:5,6). ரோமர் 1:5-ஐ வாசிக்கும்போது, இயேசு கிறிஸ்து தேவசுதன் என்று பலமாக நிரூபிக்கப்பட்டார்? மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால் இயேசுவின் உயிர்த்தெழுதல் தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரமாயிருக்கிறது. 1பேதுரு 1:3,4 வசனங்களை நாம் வாசிக்கும்போது, **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.**

வாலிபர்களே! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையைப் பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். அது அழியாத, மாசற்ற, வாடாத சுதந்திரமாக இருக்கிறது என்கிறார் தேவன். அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது! அந்த ஜீவனுள்ள நம்பிக்கை நமக்கு இருக்கிறபடியால், நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால் நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை நிச்சியமாகவே மகாப் பெரியது.

**இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு முக்கியமான ஒன்றாகும்.**

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நித்தியஜீவன் நம்பிக்கையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை எவ்வளவு உறுதியானது பாருங்கள்! தேவன் அதை நமக்கு வாக்காகக் கொடுத்திருக்கிறார். அவர் பொய்யுரையாத தேவன். எபிரெயர் 6:18,19 வசனங்களில் அந்த நம்பிக்கை நம் ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. அந்த நங்கூரமான நம்பிக்கை உறுதியும், நிலையானதுமாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல, அது திரைக்குள்ளாகப் போகிறதாக இருக்கிறது. ஒரு கப்பலுக்கு நங்கூரம் ஏன் தேவைப்படுகிறது என்பதைச் சிந்தியுங்கள். கடல் அபாயமோ, புயலோ வந்தாலும் கூட நங்கூரம் பாய்ச்சியிருந்தால் கப்பல் நிலையாக இருக்கும். வாலிபர்களாக இருக்கும் நாம் இவ்வாழ்க்கையில் சோதனை என்ற புயலை சந்திப்போம். ஆனால், நமக்கு நிலையான உறுதியான நங்கூரமிருக்கிறது. அந்த நங்கூரம் நமது நம்பிக்கையே. நாம் அந்த நம்பிக்கையைப் பற்றிக் கொண்டு இவ்வாழ்க்கையில் சோதனைகளைக் கடந்து வர வேண்டும். நாம் நிலை தவறாமல் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

எபிரெயர் 2:14,15 வசனங்களில் நாம் பார்க்கும் போது, இயேசு தமது மரணத்தின் மூலமாக, மரணத்தின் அதிகாரியான பிசாசுக்கு மிகப்பெரிய அடியைக் கொடுத்தார். அதோடு, ஜீவகாலமெல்லாம் மரண பயத்திலிருந்த நம்மையும் அவர் விடுதலையாக்கி அந்த பயத்தை நீக்கியிருக்கிறார். நாம் எப்படி மாம்சமும், இரத்தமும் உடையவர்களாக இருக்கிறோமோ அப்படியே இயேசுவும் மாம்சமும், இரத்தமு முடையவரானார். ஆனால், இயேசு மரணத்தை ஜெயித்தார். நாமும் அப்படி மரணத்தை ஜெயிப்போம் என்று அவர் வாக்குக் கொடுத்ததன் மூலம், நம்மை மரணபயம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாவு எனக்கு ஆதாயம், இவ்வுலகைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடிருப்பது எவ்வளவு மேலானது என்று தைரியமாகக் கூற முடியும் (பிலி.1:21-23). கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரம், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததைப் பற்றியும், நாமும் அப்படி எழுப்பப்படுவோம் என்பது பற்றியும் பேசுகிறது. இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின்படி மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து இவைகளை அன்பாகச் செய்ததின் மூலம், நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் ஜெயம் கொள்ளுகிறோம். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

வாலிபர்களே! நாம் இதுகாறும் வேதவசனங்களின் வெளிச்சத்தில் இயேசு கிறிஸ்து எப்படி நம்முடைய சிறந்த நண்பராயிருக்கிறார், அவர் நமக்காக எப்படிப்பட்ட பாடுகளைப் பட்டிருக்கிறார் என்று பார்த்தோம். இயேசு நம்முடைய நண்பராவதற்கு எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறார். இப்போது, இயேசுவை நம்முடைய சிறந்த நண்பராக்கிக் கொள்ள நீங்கள் ஆயத்தமாகி, இயேசு நம்முடைய நண்பராக இருக்கும்போது நம்முடைய பாரங்களை நாம் சுமக்க வேண்டியதில்லை. கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடலாம். ஏனென்றால், அவர் நமக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்து அன்பு செலுத்தியிருக்கிறார். இயேசுவுக்கு நண்பராக இருக்க நாம் பெரிதாக ஒன்றையும் செய்ய வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதுதான். அப்படி கைக்கொள்ள நம்மை நாம் ஒப்புக்கொடுப்போம்! ★

## மகத்துவமான வேதாகமம்

- ★ வேதாகமத்தில் மொத்த அதிகாரங்கள் 1189. இதில் யோவான் 3-ம் அதிகாரம் 1000-வது அதிகாரமாகும்.
- ★ பழைய ஏற்பாட்டில் நீளமான அதிகாரம் சங்கீதம் 119. புதிய ஏற்பாட்டில் லூக்கா 1.
- ★ 2ராஜா.19-ம் அதிகாரமும், ஏசாயா 37-ம் அதிகாரமும் ஒரே மாதிரியான வசனங்களையும் சம்பவத்தையும் கொண்டுள்ளது.

சிறுவர் பகுதி

# 10 குஷ்ட ரோகிகள்

Bro. ஏபில் நாயகம்

**பி**ரியமான தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். இந்த மாதமும் இந்த இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சரி, பிள்ளைகளே இந்த மாதத்திற்கான பாடம் என்ன என்பதைப் பார்க்கலாமா?

நம்முடைய அன்பான தேவன் நம்மிடம் சில காரியங்களை எதிர்பார்க்கிறார். அவைகளுள் ஒன்று, நாம் சிலருக்கு நன்றியாக இருப்பது. அப்படியென்றால் என்ன? நம் அன்றாட வாழ்க்கையில் நம் தேவனிடமிருந்து அநேக நன்மைகளைப் பெறுகிறோம். அப்படித்தானே! அப்படிப் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்கு நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோமா? என்று அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

லூக் 17:11-19 ல், இயேசுவிடம் குஷ்டரோகமுள்ள 10 பேர் வந்தார்கள் என்று வாசிக்க முடியும். அவர்கள் இயேசுவை நோக்கி **ஐயரே! எங்களுக்கு இரங்கும்** என்று அவரிடம் உதவி கேட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து அவர்கள் மீது கரிசனை கொண்டு, அவர்களுக்கு சுகம் கொடுத்தார். சுகம் பெற்ற 10 குஷ்ட ரோகிகளில் **ஒருவன்** மட்டும் திரும்ப இயேசுவிடம் வந்து உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்.

யோவான் 20:30-ல் நாம் வாசித்தால் இயேசு செய்த எல்லா அற்புதங்களும் நமக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லை என்று கவனிக்க முடியும். அப்படியென்றால், நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டவைகள் நாம் சில முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

சரி பிள்ளைகளே! அப்படியானால் அந்த 10 குஷ்டரோகிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம், என்ன? ஆம் **நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்** என்பது தான். நாம் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பெற்றோருக்காக, உடன் பிறப்புகளுக்காக, நாம் தங்கும் வீட்டிற்காக, நாம் உண்ணும் உணவுக்காக, உடுத்தும் உடைகளுக்காக, படிக்கும் பள்ளிக்காக, நமக்குக் கொடுத்த ஞானத்திற்காக, ஒவ்வொரு நாளும் நம்மைப் பாதுகாப்போடும் சுகத்தோடும் வைத்திருப்பதற்காக நாம் நன்றி செலுத்துகிறோமா?

பிள்ளைகளே! தினந்தோறும் நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். அப்பொழுது தேவன் நிச்சயம் உங்கள் மீது பிரியமாயிருப்பார். யாக். 1:17 வாசித்தால் நமக்கு கிடைக்கும் நன்மையான காரியங்கள் யாவும் தேவனிடத்திலிருந்து வருகிறது என வேத வசனம் கூறுகிறது.

**சங். 13:6; "கர்த்தர் எனக்கு நன்மை செய்த படியால் அவரைப் பாடுவேன்".**

**தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!** ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை மார்ச் மாத இதழில்)**

1. செங்கோல் எங்கிருந்து எழும்பும்?
2. கர்த்தருக்குரிய பஸ்கா எப்போது?
3. கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேல் ஏன் மூண்டது?
4. கர்த்தராகிய தேவன் யார் நடுவே வாசம் பண்ணுகிறார்?
5. செலாப்பியாத்தின் குமாரத்திகள் யார்?
6. அடைக்கலப்பட்டணங்கள் எத்தனை?
7. எத்தனை வருஷம் இஸ்ரவேலர் வனாந்திரத்தில் அலைந்தார்கள்?
8. பிலேயாம் இஸ்ரவேலை எத்தனை முறை ஆசீர்வதித்தான்?
9. யாருக்கு சமாதானத்தின் உடன்படிக்கை கட்டளையிடப்பட்டது?
10. தேசத்தைப் பங்கிடுபவர்கள் யார்?

(எண்ணாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

## ஜனவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. 12 பேர் (எண்.13:1-15)
2. நூனின் குமாரன் யோசுவா (13:16)
3. காலேப், யோசுவா (14:6,7)
4. தீர்க்கமான உத்தரவு இல்லாததால் (15:32-34)
5. கோராகு, தாத்தான், அபிராம் (16:24)
6. தேவன் (18:20)
7. செத்துப்போனவனுடைய பிரேதம் (19:11)
8. ஆரோன் (20:29)
9. ஊற்றுத்தண்ணீரே பொங்கிவா (21:17)
10. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது (24:1).

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

1. N. இந்திரா ஜெபக்கனி - தூத்துக்குடி
2. M. செல்வம் - கோவை
3. R. பாக்கியம், ராஜேஷ் - சென்னை
4. S. சாந்தகுமாரி - நாசரேத்
5. N. ஜெபத்தாய் - நாசரேத்
6. செல்வமணி குணசேகரன் - சென்னை
7. S. ஜோதி சுரேஷ் - திருச்சி
8. A. பிலோமினா - கோவை
9. R. பாரதி - கோபி
10. K. ஜெயசிங் - சென்னை
11. K. இம்மானுவேல், ஈஸ்வரி - பவானி
12. J. ஜெமீலா செல்லையா - நெல்லை
13. S. ஜெயராஜ் - கோவை
14. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
15. J. ஜான்சி - ஆனைமலை
16. மரகதம் திரவியம் - தேனி
17. G. சாமுவேல் மோகன்தாஸ் - சென்னை
18. V.C. ரூபவல்யா - நாசரேத்
19. T. சத்தியசீலன் - கோவில் பட்டி
20. G. பாக்கியம் சம்பூரணம் - ஈரோடு
21. J. மாலதி ஜெயக்குமார் - மூலனூர்
22. J. அபினேஷ் - மூலனூர்
23. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
24. S. ஆதாள் - கோவில்பட்டி
25. V.S.S. பால்ராஜ் - மதுரை
26. மாலதி ஜெயசெல்வம் - சீர்காழி

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியை எவ்விதங்களில் அவித்துப் போடுகிறோம்?

**பதில் :** கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொருவருடைய இருதயத்திலும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். சபை ஸ்தாபிக்கப்பட்ட அந்நாட்களில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். அதேபோல், அப்போஸ்தலர்கள் யார்மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர் (அப்.2:1-4; 8:17,19). இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய வார்த்தையினாலே அதாவது சத்திய ஆவியாகிய தேற்றரவாளனாலே வழிநடத்தப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலேனிக்கேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது ஆவியை அவித்துப் போடாதிருங்கள் என்று எச்சரிக்கிறார் (1தெச.5:19). இங்கே அவித்துப்போடுதல் என்பது அணைத்துப்போடுதல் என்னும் பொருளைத் தருகின்றது. மத்.25:8-ல் புத்தியில்லாத கன்னிகைகள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றனர். அணைத்துப்போடுதல் அல்லது அவித்துப்போடுதல் என்பது, எரிந்து கொண்டிக்கிற தீவட்டியை ஈரமான போர்வையைக் கொண்டு அணைப்பதைப் போல, நம் இருதயங்களில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியையும் நாம் கீழ்க்காணும் விதங்களில் அவித்துப்போட முடியுமாதலால், அச்செயலுக்கு எச்சரிக்கையாயிருந்து நமக்குள் கொழுந்துவிட்டு எரியும் பரிசுத்த ஆவியை அவித்துப்போடாமல் ஆவியில் வளருவோம்.

**தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணும்போதும் அதை அசட்டைபண்ணும்போதும் நாம் ஆவியை அவித்துப் போடுகிறோம்.** இன்றையநாட்களில், பிரசங்கம் தான் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடப் படுகிறது. அற்புத அடையாளங்கள் மற்றும் அந்நியபாஷை போன்ற காரியங்களை, பிரசங்கத்தை விட மேலானது என்று எண்ணும் போது ஆவியை அவித்துப் போட முடியும். எச்சரிக்கையாயிருப்போம்.

**நாம் இடைவிடாமல் ஜெபிக்காதபோது ஆவியை அவித்துப் போடுகிறோம்.** நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமென்று 1தெச.5:17-ல் காண்கிறோம். இடைவிடாமல் ஜெபிப்பது என்பது தொடர்ச்சியான ஜெபம் என்பதல்ல, மாறாக, நாம் சீரான இடைவெளியில் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். அதாவது, தானியேலைப் போல ஜெபிக்க வேண்டும். (தானி. 6:10). அப்படி செய்யாதபொழுது ஆவியை அவித்துப்போட முடியும். உணர்ந்து செயல்படுவோம்.

**பொல்லாங்கை விட்டு விலகாததின் மூலமாக நாம் ஆவியை அவித்துப் போட முடியும்.** பொல்லாங்காய்த் தோன்றுகின்ற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். ஒரு கிறிஸ்தவன் தனிப்பட்ட முறையில் ஓர் இடத்திற்குப் போய் பாவத்தில் ஈடுபடாவிட்டாலும் கூட, பாவமாகக் கருதப்படும் இடத்திற்குப் போவதையே தவிர்க்க வேண்டும். நடைகளை ஸ்திரப்படுத்தி நலமானதை நாடுவோம். ★

# ஏற்றுக்கொள்ளப்படுதலும், கைவிடப்படுதலும்

Bro.K.M. பிலிப்

**நா**ம் வாழும் உலகில் எதிர்மறை நிகழ்வுகள் அநேகமுண்டு. ஆண்×பெண்; இரவு×பகல்; உயர்வு×தாழ்வு; உண்டு×இல்லை; உண்மை×பொய்; மகிழ்ச்சி×துக்கம்; பிறப்பு×இறப்பு... இப்படி அநேகக் காரியங்களைப் பார்க்கிறோம். ஆவிக்குரிய காரியங்களிலும் தேவன்×பிசாசு; பரிசுத்தம்×பாவம்; சத்தியம்×அசத்தியம்; பரலோகம்×நரகம்.... என்ற எதிர்மறைகளை எதிர்நோக்குகிறோம். இந்நிலையை இயேசுவின் வருகையிலும் நாம் சந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதை மத்:24:39-41 பகுதியில் இயேசுவின் வருகையின் போது, ஒரே இடத்தில் இருக்கும் இருவரில் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படுதலும் மற்றொருவர் கைவிடப்படுதலும்; ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுதலும், ஒருத்தி கைவிடப்படுதலுமான எதிர்மறைச் செயலை காண்கிறோம். மத். 25:31-46 பகுதியிலும், திரள் கூட்டமான மக்கள் வலது, இடது புறமாகப் பிரிக்கப்பட்டு, வலது பக்கத்தில் நிற்பவர்கள் ஏற்றுக் கொள்ளப்படவும், இடது பக்கத்தில் நிற்பவர்கள் கைவிடப்படுதலுமான நிலைமைகளைப் பார்க்கிறோம்.

அன்பானவர்களே! கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நோக்கமும், நம்பிக்கையும், விருப்பமும் கிறிஸ்துவின் வருகையில் அவர் நம்மைப் பார்த்து **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே** என்று (மத்.25:34) அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாய் இருக்க வேண்டுமென்பதேயாகும். மாறாக **சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு அகன்று போங்கள்** என்று இயேசுவால் நாம் கைவிடப் படுவோமானால் அது எவ்வளவு பெரிய ஏமாற்றமும், வேதனையும் உள்ளதாயிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இதில் நம் நிலை என்ன? நாம் ஒரே இடத்தில் வசிக்கலாம் ஒரே இடத்தில் ஆராதிக்கலாம்; ஒரே செயலைச் செய்யலாம்; ஒரே நோக்கமாயிருக்கலாம்; ஒரே மாதிரியான வாய்ப்பைப் பெற்றிருக்கலாம். யாராயிருந்தாலும் வருகையில் மேற்கொண்ட எதிர்மறை நிகழ்வைச் சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நம் நிலையை நிலைநிறுத்திக் கொள்ள வேதம் சுட்டிக்காட்டும் சில நடைமுறை நிகழ்வுகளை ஆராய்ந்து பார்த்து கிறிஸ்துவின் வருகையில் அவரால் நாம் ஏற்றுக் கொள்ளப்பட பரலோக தேவன் தாமே உதவி செய்வாராக.

**I. நாம் ஒரே இடத்தில் வசிக்கிறவர்களாயிருக்கலாம் : (மத்.25:31-46)**

தேவனுடைய படைப்பில் மனிதன் வாழும்படியான ஒரே இடம்

இந்தப் பூமியே (சங்.115:16). இயேசுவின் இரண்டாம் வருகையில் இப்பூமியில் வாழ்கின்ற, வாழ்ந்து மரித்துப்போன மக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு இயேசுவுக்கு முன் அவர்கள் வலது பக்கம், இடது பக்கம் என இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். வலது பக்கம் உள்ளவர்கள் இயேசுவால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும், இடது பக்கம் உள்ளவர் கைவிடப்படும் காட்சிகளை அங்கு காண்கிறோம். ஏன் இந்தப் பாகுபாடு? இயேசு அவர்களிடம் எதிர்பார்த்தது என்ன?

இவ்வுலகில் வாழும் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாகும் வாய்ப்பை தேவன் தன் குமாரன் மூலம் கொடுத்திருக்கிறார். (யோவான்1:12). வலது பக்கம் நிற்கும் தேவப் பிள்ளைகளிடத்தில், தேவனுடைய பண்பாகிய மனிதநேயத்தை இயேசு கண்டார். தங்கள் உலக வாழ்க்கையில் சக மனிதர்களிடம் அன்பு பாராட்டி இரக்கமுள்ளவர்களாய், மன உருக்கத்தோடு இக்கட்டில் அவர்களுக்கு உதவி செய்யவும், விசாரிக்கவும், ஆறுதல்படுத்தி தேற்றவுமான நன்மைகள் செய்யும் கிரியைகளைக் கண்டார். **உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக** என்ற பிரதான கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அதை கிரியை மூலம் வெளிப்படுத்தினார்கள் (மத்.22:39). இவர்கள் இயேசுவால் **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!....** என்று (மத்.25:34) ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். இப்படிப்பட்ட தேவ பண்பற்றவர்கள் **உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனைப் போல** (வெளி.3:1) காணப்பட்ட இடதுபக்கமுள்ள மக்கள் இயேசுவால், **சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு.... போங்கள்** என்று கைவிடப் பட்டார்கள் (மத்.25:41).

பிரியமானவர்களே! நீங்கள் லேவியராய், ஆசாரியர்களாய்க் கூட இருக்கலாம். ஆனால், சக மனிதனின் இக்கட்டான சூழ்நிலையில் அவனிடத்தில் அன்பு காட்டி, மனமுருகி உதவி செய்த சமாரியனே நித்திய ஜீவனுக்குத் தகுதி உள்ளவனாக இயேசுவால் சுட்டிக்காட்டப்பட்டான். (லூக்கா 10:25-37). நாமும், வாழும் இந்த வாழ்க்கையில் தேவன் எதிர்பார்க்கும் மனித நேயத்தோடு செயல்பட்டு, அவரால் பரலோக வாழ்க்கைக்கு ஏற்றுக்கொள்ளப்பட நம்மைத் தகுதியாக்கிக் கொள்வோம்.

### II. ஒரே செயலைச் செய்த இருவர் (மத்.7:24-27)

பரிசேயன், ஆயக்காரன் இருவரும் ஜெபிக்கும்படி தேவாலயத்திற்குப் போனார்கள். இருவரும் ஜெபித்தார்கள். ஆனால் தேவனால் ஆயக்காரனுடைய ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பரிசேயனுடைய ஜெபமோ கைவிடப்பட்டது. இருவரும் ஒரே இடத்தில், ஒரே செயலை, ஒரே தேவனை நோக்கி ஏறெடுத்தும் ஏன் எதிர்மறையான தீர்ப்பு? கவனிப்போம். பரிசேயன் தன் ஜெபத்தில் மற்றவர்களைக் குற்றப்படுத்தி, அற்பமாயெண்ணி, தன்னை நீதிமானென்று, தனக்குத் தானே பெருமைபட்டுக் கொண்டான். தன் வாழ்க்கை மூலம் தேவனைக் கனப்படுத்தாமல், தன்னையே கனப்படுத்தி பெருமைபட்டுக் கொண்டான். அவன் ஜெபித்தாலும், கொடுத்தாலும், தேவனை அறிகிற அறிவிலே

சரியாய் வளரவில்லை (2பே. 3:18). ஆம், நம் தேவன் **பெருமையை வெறுக்கிற தேவன்** (நீதி. 8:13) பெருமை பேசும் நாவை அறுக்கிற தேவன் (சங். 12:3) பெருமை உள்ளவர்களை எதிர்த்து நிற்கிற தேவன் (1பேதுரு 5:5) என்பதை அறிந்துகொள்ளத் தவறிவிட்டான். அவன் பெருமையினிமித்தம் அவன் ஜெபம் கைவிடப்பட்டது. ஆனால், ஆயக்காரனோ பரிசுத்த தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தானே நிதானித்துப் பார்த்து, அவருக்கு முன்பாக முற்றிலும் தன்னைத் தாழ்த்தினான். ஆம் தாழ்மையுள்ளவர்களுக்கு இரங்குகிற தேவன் (நீதி. 3:34). கிருபையாய் அவனுடைய ஜெபத்தை ஏற்றுக்கொண்டார். தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிற தேவன், பாவியாகிய ஆயக்காரனை நீதிமானாக உயர்த்தினார்.

அன்பான தேவ ஜனமே! மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதிருப்போம். (1கொரி.1:29). நாம் மண்ணென்றும், ஒன்றுமில்லையென்றும், எல்லாம் தேவன் கொடுத்தார் என்பதையும் உளமார ஒப்புக்கொள்வோம். **மரண பரியந்தம் தேவனுக்கு முன் தன்னைத் தாழ்த்தின கிறிஸ்துவை** (பிலி.2:8) கிறிஸ்தவர்களாகிய நாம் முன்மாதிரியாய்ப் பின்பற்றி நடப்போம். தாழ்த்தின கிறிஸ்துவை தேவன் பரலோகத்திற்கு உயர்த்தி ஏற்றுக்கொண்டதைப்போல (வெளி.3:21) அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கிற நாமும் பரலோகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவோம் என்கிற விசுவாசத்தோடு வாழ்ந்திருப்போம்.

### III. ஒன்றாக ஒரே நோக்கத்தோடு செயல்பட்ட ஒரு குழு (மத். 25:1-13)

இங்கு 10 கன்னிகள் மணவாளனுக்கு எதிர்கொண்டு, அவரோடு கூட கல்யாண வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம், ஒரே விருப்பத்தோடு ஒன்றாய் புறப்பட்டு, காத்திருந்தும் இப்படி எல்லாம் ஒன்றாயிருந்தும் மணவாளன் வந்தபோது ஐந்து பேர் மட்டும் அவரோடு கல்யாண வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்; ஐந்து பேர் கைவிடப்பட்டார்கள். இந்த மாறுபட்ட நிலை ஏன் வந்தது?

அன்பானவர்களே! பத்து கன்னிகளும், மணவாளன் வருகிறார் என்ற சத்தம் கேட்டதும் தங்கள் தீவட்டிகளை எரித்தார்கள். 10-ம் எரிந்தது. ஆனால், சிறிது நேரத்தில் 5 பேருடைய தீவட்டிகள் எண்ணெய் இல்லாமல் அணைந்து போயிற்று. மற்ற 5 பேருடைய தீவட்டிகள் தொடர்ந்து எரிந்து பிரகாசிப்பதற்கு எண்ணெய் போதுமானதாக இருந்ததால் மணவாளனோடு கல்யாண வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். முழு ஆயத்தமில்லாத 5 கன்னிகைகள் கைவிடப்பட்டார்கள்.

அன்பான கிறிஸ்துவின் சபையாரே! நாம் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டது முதல் ஓர் உன்னதமான இடத்திற்கு செல்ல அரிய பயணத்தைத் துவக்கிக் காத்திருக்கிறோம். இப்பயணத்தை வெற்றியோடு முடிக்க, பக்தி வாழ்க்கையைத் தொடர்ந்து, இயேசுவின் வருகை மட்டும் பிரகாசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தருக்குள் நாம் படும் பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் (நாம்)

உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியைகளிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டும் (1கொரி. 15:58). சபை கூடி வருதல், ஜெபித்தல், தியானித்தல், கொடுத்தல், ஆத்தும ஆதாயம் என்ற ஓர் அர்ப்பணிப்பு வாழ்க்கையில், சபையோடு நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். நம் ஆவி, ஆத்துமா, சரீரம், முழுவதையும்..... குற்றமற்றதாயிருக்கும்படி காத்துக்கொள்ள வேண்டும். (2தெச.1:23). இப்படி முடிவு பரியந்தம் முழு ஆயத்தத்தோடு நிலைத்து நிற்போமானால், மணவாளனாகிய இயேசுவின் வருகையில் அவரோடு பரலோக வாழ்க்கைக்கு நாமும் ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

IV. **ஒரே மாதிரியான வாய்ப்பைப் பெற்ற இருவர் (லூக்கா. 23:39-43).**

கொல்கொத்தாவின் உச்சியில் உலக இரட்சகர் இயேசுவோடு மிக நெருக்கமாக (சிலுவைகளில்) இருக்கும் வாய்ப்பைப் பெற்ற இரண்டு கள்ளர்களுக்கும் ஒரே மாதிரியான வாய்ப்பு கிடைத்தும் ஒருவன் இயேசுவால் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். ஒருவனோ கைவிடப்படுகிறான். இந்தப் பரிதாப நிலைக்கு யார் காரணம்?

நம் தேவன் பட்சபாதமில்லாதவர் (அப்.10:34) எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் (1தீமோ.2:4). என்ற விருப்பமுள்ளவர். ஆகவே, எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்ற வாய்ப்பை எங்குமுள்ள மனிதருக்கும் கட்டளையிட்டிருக்கிறார் (அப். 17:30). ஆகவே, நாம் சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. இங்கு ஒரு கள்ளன் தனக்குக் கிடைத்த அந்தக் கடைசி வாய்ப்பைப் பிடித்துக் கொண்டான். தன்னைத்தான் உணர்ந்தான். தன் தேவபயமற்ற நிலையில் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் பெற முடிவு செய்தான். இயேசுவிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான். இப்படி தேவனுக்குப் பயந்து தன் பாவத்தை உணர்ந்து கிறிஸ்துவை அறிக்கையிட்டு அவருக்கு முன், அடியேனை நினைத்தருளும் என்று விண்ணப்பித்தான். அவன் வேண்டுதல் கேட்கப்பட்டு, அன்றே கிறிஸ்துவோடு, பரதீசிலிருக்கும்படியாய் ஏற்றுக் கொள்ளப்பட்டான். மற்றொருவனோ தேவ பயமற்றவனாய் தன் பாவத்தை உணராதவனாய் அழிந்துபோகிற மாம்சத்தின் இச்சைக்குரியவைகளையே இயேசுவிடம் எதிர்பார்த்தான். அவன் விண்ணப்பம் கைவிடப்பட்டது. அன்பானவர்களே! இவ்வுலகில் வாழும் நம் அனைவருக்கும் இரட்சிப்படைய தேவகுமாரன் மூலம் ஒரே வாய்ப்பைப் பெற்றுள்ளோம். கரடுமுரடான கள்ளனே ஏற்றுக்கொள்ளப்பட்டான் என்றால், நாம் ஏற்றுக் கொள்ளப்படுவது நிச்சயம் அல்லவா? உலக ஆதாயமல்ல! மேலானவைகளைத் தேடுவோம். மேலான பரலோகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவோம்.

அன்பானவர்களே! நாம் கைவிடப்படவா எல்லாவற்றையும் விட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோம். **கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய எக்காள சத்தத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வரும் பொழுது,** மேகங்கள் மேல் அவர்களோடே கூட நாமும் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பதற்கான வாய்ப்பு (1தெச.4:16,17) உண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு வாழ்ந்திருப்போம். நிச்சயம் நம் இயேசு நம்மை கைவிடமாட்டார். நாம் ஏற்றுக் கொள்ளப்படுவோம் (2தீமோ.4:7,8). ★

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

**திரியேக உபதேசம் சரியா?**

திரியேகக் கொள்கைக்காரர்கள் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை ஏராளமான வசனங்களைத் தங்களுக்குச் சாதகமாக்கிப் பேசுகின்றனர். அவர்கள் பயன்படுத்தும் சில வசனங்களுக்கு மட்டும் இங்கே பதில் காண்போம்.

ஒன்றான மெய்த்தேவன், தேவனாகிய கர்த்தர் ஒருவரே, போன்ற வார்த்தைகளை, திருமறை கொண்டிருப்பது உண்மையே. தேவனுக்கு மட்டுமா சொல்லப்பட்டுள்ளது? புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்று வசனம் பேசவில்லையா? (ஆதி. 2:24; மத்.19:6; எபே. 5:31. கிறிஸ்துவும், பிதாவாகிய தேவனும் அப்போஸ்தலர்களும் அவர்களுடைய போதனைகளைக் கேட்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றாயிருப்பதை எப்படி எடுத்துக் கொள்வீர்கள்? (யோவான் 17:20,21).

**1. ஒன்றான மெய்த்தேவன் பன்மையிலும் ஒருமையிலும் குறிப்பிடப்படுகிறார்.**

ஆதியாகமம் 1:1 லிருந்து 2:23 வரை, **தேவன்** என்ற பதம் 39 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் பன்மையைக் குறிக்கும் ஒருமைச் சொல்லில் பேசப்பட்டுள்ளது. எபிரெய மொழி சொல் விளக்க அகராதி எண் 430 ல் **ஏலோஹிம்** என்று குறிப்பிட்டு எண் 433 ல் பேசும் ஒருமைச் சொல்லிலிருந்து இது வேறுபட்டது என கூறுகிறது. எபிரெய மொழியில் இது **ஏலோஅ** என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த பன்மைச் சொல் **ஏலோஹிம்** 2507 முறையும் **ஏலோ** மிக அபூர்வமாக **தேவன்** எனும் பதத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏன் இந்த வித்தியாசம்? திருமறையில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய தேவத்துவமே பெரும்பாலும் (மூன்று நபரும்) ஒருமித்துப் பேசுவது போல் தான் காட்டப்படுகிறது. அதாவது, தேவனுடைய பகுதியில் எதைச் சொன்னாலும், செய்தாலும் தேவத்துவத்தில் தனியொரு நபர் அதிகமாய் செயல்படுவதில்லை என்பதையே இது காட்டுகிறது. சிருஷ்டிப்பிலும் கூட தனியொரு நபர் செயல்படவில்லை என்பதை திருமறை விவரிக்கிறது (ஆதி. 1:1, 2; 1:26,27; யோவான் 1:1-3; கொலோ. 1:14-16).

**ஏல்** என்பது ஒரு பொதுவான வார்த்தையாக **தேவன்** என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. விக்கிரக தேவர்களுக்கும் ஜீவனுள்ள தேவனுக்குமான பொதுவான வார்த்தை இது. இப்பதம் எபிரெய மொழிச் சொல் விளக்க அகராதியில் எண் 410 பேசுகிறது. குறிப்பிட்ட ஒருவர் தான் மெய்யான ஜீவனுள்ள தேவன் என்று பகுத்து உணராத அந்த யுகத்தில் மெய்த்தேவனைக் குறிப்பிட்டுக் காட்ட மனுஷர்களுக்கும் இடங்களுக்கும் ஏல் என்ற வார்த்தையேடு கூடிய தொகுப்புப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக

**இடங்களுக்கு – பெத்தேல், ஏல் பெத்தேல்.**

**மனுஷர்களுக்கு – லேமுவேல், பெனியேல், பெத்துவேல்,எசேக்கியேல், தானியேல், சாமுவேல், மிஸாவேல் போன்றவை.**

**தேவனுக்கு – ஏல்ரோயீ, ஏல்சடாய், ஏல் ஓலம்**

ஏல் ஓலம் எனும் இப்பதம் தமிழ் திருமறையில் இல்லை. மாறாக, ஏசாயா 40:28 ல் அநாதி தேவன் என்பதற்கும், ஆதியாகமம் 21:33ல் வரும் சதாகாலமும் இருக்கிற தேவன் என்பதற்கும் எபிரெய மொழியில் பயன்படுத்தப்பட்டது.

தேவனை **தேவனாகிய கர்த்தர்** என்று ஆதியாகமம் 2:24 லிருந்து 3:24 வரை 19முறை சொல்லப்பட்டுள்ளது. **யேகோவா** என்று தேவனுடைய நாமத்தை உச்சரிக்கப் பயந்து, உச்சரிக்க இயலாமற் போனவர்கள் எளிதாக உச்சரிக்க ஏதுவாக இந்தப் பதம் பயன்படுத்தப்பட்டது. இதன் பொருளும் யேகோவா என்பதன் பொருளும் **தேவன் தாமாயிருப்பவர்** அல்லது **எப்பொழுதும் இருப்பவர் என்பது** இதன் உட்பொருள் **தேவன்** அல்லது **தேவனாகிய கர்த்தர்.** ஆனாலும், யேகோவா எனும் அவருடைய நாமம் யாத்திராகமம் 3-ம் அதிகாரம் வரை அறியப்படவில்லை.

யாத்திராகமம் 3:14-ல் **அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால் நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?** என்று (வச.13ல்) கேட்ட மோசோக்கு தேவன் கொடுத்த பதில்தான் வசனம் 14ல் சொல்லப்பட்டுள்ளது. **அதற்குத் தேவன் : இருக்கிறவாக இருக்கிறேன்** என்று மோசேயுடனே சொல்லி, **இருக்கிறேன்** என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். மேலும், யாத். 6:3 ல், **தேவன் மோசேயை நோக்கி :** நான் யேகோவா. சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை; என்று சொன்னார். ஆக **தேவனாகிய கர்த்தர்** (ஆதி. 2:24-3:24 வரை), **யேகோவா** (யாத். 3:14), **தேவனாகிய ஆண்டவர்** (சங். 73:28) ஆகிய மூன்றும் ஒரே நாமத்துக்குரியன. **தேவனாகிய கர்த்தர்** என்பதற்கும், **யேகோவா** என்பதற்கும் எபிரெய சொல் (அகராதி எண் 3068) இந்தப் பெயர்களை நேரடியாகப் பயன்படுத்த பயந்த ஜனங்களினிமித்தம் அறிமுகப்படுத்தப்பட்டது **தேவனாகிய ஆண்டவர்** (யேகோவீ) எனும் பதம் (எண் 3069).

மேலும் இந்த இரண்டு பெயர்களும் (ஏல், ஏலோஹிம்) ஜீவனுள்ள மெய்தேவனுக்கும் விக்கிரக தேவர்களுக்கும் பன்மையைக் குறிக்கும் ஒருமையில் திருமறை பேசுகிறது. என்பதற்கு (ஆதி. 35:1-3). ஒரு உதாரணம், யாக்கோபு தனது சகோதரன் ஏசாவுக்குப் பயந்து தனது தாய்மாமா வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்த போது **லூஸ்** எனுமிடத்தில் இரவின் நித்திரையில் சொப்பனங்கண்டு, மெய்யாகவே தேவன் அந்த ஸ்தாலத்தில் இருக்கிறார் என்று சொல்லி, அந்த இடத்திற்கு **பெத்தேல்** (பெத்-வீடு, ஏல்-தேவன் என்று பெயரிட்டார். அதாவது தேவனுடைய வீடு என்று பெயரிட்டார். மேலும், ஒரு பொருத்தனை செய்து தான் திரும்பி வரும்போது கர்த்தர் தன்னை ஆசீர்வதித்தால், (பொருளாதார ரீதியாக) தான் பெற்று வருபவைகளில் தசமபாகம் செலுத்தி, பலியிடுவதாக வேண்டிக் கொண்டார். தேவனும் யாக்கோபோடு இருந்து பொன், பொருள், கால் நடைகளான திரளான ஆஸ்திகளுடன் திரும்பிவரச்செய்தார். தனது பொருந்தனையை மறந்துவிட்டார் யாக்கோபு. தேவன் அவருக்கு நினைவுபடுத்தி பொருந்தனையை நிறைவேற்றச் சொல்கிறார்.

ஜீவனுள்ள தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்த அவருடைய தாய்மாமா, அவனுடைய மகள் ராகேல் சொரூபங்களிலும் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். ராகேல் தன் தகப்பனுடைய சொரூபங்களைத் திருட்டளவாய் மறைத்து தன்னோடு கொண்டு வந்திருந்தாள். பெத்தேலுக்குச் சமீபமாய் அவர்கள் வந்தபோது, தேவன் யாக்காபினிடத்தில் **நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருக்க நீ சகோதரனாகிய ஏசா முகத்துக்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார்.** அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடே கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். நாம் எழுந்து பெத்தேலக்குப் போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்திரவு அருளிச் செய்து, நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த **(ஏலோஹிம்)** தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டுவேன் என்றான். இந்த ஆதி. 35ல்

வச.1. **தேவன் (ஏலோஹிம்)** யாக்கோபை நோக்கி எபி.எண்.430

வச.2."உனக்குத் தரிசனமான **தேவனுக்கு (ஏல்)** எபி.எண் 410

வச.3."உங்களிடத்திலிருக்கிற அந்நிய தெய்வங்கள் **(ஏலோஹிம்)** 430

வச.4."என்னோடே கூட இருந்த தேவனுக்கு (ஏல்) 410

என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# ஆவியில் எளிமை ! ?

Bro. பாண்டியன்

**ந**மதாண்டவர் இயேசுவின் புகழ்பெற்ற மலைப்பிரசங்கத்தில் முதல் வாக்கியமாக **ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது** (மத். 5:3) என்ற சொற்றொடரைக் காணலாம். இங்கு **ஆவியில்** மனுஷரின் குணாதிசயங்களை என்பது ஒருவனுடைய மனநிலையைக் குறிக்கறதாக உள்ளது. இதுதான் ஆவியே தீர்மானிக்கிறது. அவனுடைய பேச்சு, நடவடிக்கை போன்ற காரியங்களுக்கு அவனின் ஆவியே காரணமாகிறது. அந்த ஆவியில் ஒருவனுக்கு எளிமை அல்லது தாழ்மை இருக்கும்போது அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் பரலோக ராஜ்ஜியத்திற்கு சொந்தக்காரராகவும் இருக்க முடியும் என்பதே ஆண்டவரின் உபதேசம்.

பழைய ஏற்பாட்டு **சுவிசேஷநூல்** என்று அழைக்கப்படும் ஏசாயா புத்தகத்தில் கடைசி பகுதியில் வானம் சிங்காசனமும், பூமி பாதபடியாகவும் கொண்ட மகாப்பெரிய தேவனாக அவர் இருந்தாலும், மனுஷரில் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன் என்கிறார் (66:2) நாம் உதவி எதிர்பார்க்கும் சூழ்நிலையில் அநேகரின் பார்வை நம் மீது படாதா என்று ஏங்குவதுண்டு. மருத்துவமனையில், பயணச்சீட்டு பதியுமிடத்தில், வேலை தேடும் பட்சத்தில் உயரதிகாரிகளின் பார்வை நம் மீது பட நாம் விரும்புகிறோம். ஆனால், எல்லாரிலும் பெரியவரும், எல்லா உதவியும் செய்ய வல்லவருமான நம் தேவனின் பார்வை நம் மீது பட வேண்டாமா? அதற்குத்தான் தேவக்குமாரன் நாம் ஆவியில் எளிமையான தாழ்மையாய் இருக்க ஆலோசனை கூறுகிறார்.

தாழ்மை சிந்தனையினால் நாம் பெறும் ஆசீர்வாதம் பற்றி மேலும் ஏசாயா 57:15-ல் பணிந்தவர்களின் ஆவியைத் தேவன் உயிர்ப்பித்து அவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறவராய் இருக்கிறார் என்று காண்கிறோம். தண்ணீரில்லாத பயிர்கள் வாடிப்போவது போல, நம் ஆவி உலகப் போராட்டங்களினால் வாடிப்போகிறது. அப்படி நாம் சோர்ந்து போகும் போதெல்லாம் தேவன் நமது வார்த்தைகளினால் உயிர்ப்பிக்கிறார். அதையே தேவ குமாரன் இயேசு தாகமுள்ளவர்களுக்கு ஜீவத்தண்ணீர் தருவதாகக் கூறினார். தேவன் நம்மிடத்தில் வாசமாயிருக்க நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பது அவசியமாகும். மனிதன் தன்

ஆவியில் நிலை தடுமாறும்போது, பாவத்தில் வீழ்ந்து போகும் ஆபத்து உண்டு. அதனால் தான் தாவீது பத்சேபாளிடத்தில் செய்த தவறை உணர்ந்து வருந்திய போது **தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்** என்று கதறி ஜெபம் செய்தான். நாம் பாவத்திற்கு விலகி இருக்கவும் தேவன் நம்முடைய ஆவியை புதுப்பிக்கவும் நமக்கு ஆவியில் எளிமை அவசியம் என்பதே கிறிஸ்துவின் அடிப்படை உபதேசமாகும். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்று இயேசுவானவர் தம்மையே நமக்கு முன்னுதாரணமாக வைக்கின்றார். மனிதன் ஆவிக்கு இளைப்பாறுதல் தேவையானால் அவன் நிச்சயம் இயேசுவினிடம் வந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். பவுல் ரோமருக்கு எழுதும்போது **நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்** (ரோமர்.8:14) என்று பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியுடன் இணைந்து செயல்படுவதை வெளிப்படுத்தியிருக்கிறார். நமக்கு ஆவியில் எளிமை இருக்கும்போது மட்டுமே எரேமியா தீர்க்கன் சொல்லுவது போல், நாம் வலது, இடது புறங்களில் சாயாமலிருக்க **வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று சொல்லுகிற தேவனுடைய சத்தத்தை நம் காதுகள் கேட்கும்** (எரேமி.30:21) என்கிறார். அதாவது தேவையான சமயத்தில் தேவ செய்தியாகிய பிரசங்கங்களின் வழியாக தேவன் நம்மை வழிநடத்துவார்.

இப்படிப்பட்ட எளிமை ஆவியில் நமக்கு இருக்கும்போது நாம் தேவ செய்திகளுக்குக் கவனமாகச் செவிகொடுத்து சரியான பாதையில் செல்லலாம்! அது மாத்திரமல்ல அப்படிப்பட்டவர்களுக்குத் தான் கர்த்தர் சமீபமாயிருந்து இரட்சிக்கிறார் என்கிறான் சங்கீதக்காரன் (சங். 34:18) மேட்டிமை உள்ளவனையோ தூரத்திலிருந்துதான் கர்த்தர் அறிகிறார் என்பது நாம் அறிவோமல்லவா? தேவனைப் பிரியப்படுத்த மனிதர்கள் பல விதமான பலிகளைச் செலுத்தினார்கள். மற்றும் விளைச்சலின் முதற் பலன்களையும், தசமபாகங்களையும் கொண்டுவந்தார்கள். ஆனால் தேவன் அதிலெல்லாம் பிரியப்படாமல் நொறுங்குண்ட ஆவியே தேவனுக்குக்கேற்கும் பலிகள், அதை அவர் புறக்கணிக்கமாட்டார் என்கிறான் சங்கீதக்காரன். ஒரு தேசம் சுகமாயிருக்க வேண்டுமானால் தேவனுடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபித்தால் மட்டுமே அது சாத்தியமாகும் (2நாளா.7:14) என் தேசம் சரியில்லை என்று ஒரு கிறிஸ்தவன் பேசக்கூடாது. அவன் ஆவியில் எளிமை உள்ளவனாய் தேவனிடம் ஜெபிக்கக் கடமைப்பட்டவன்.

அசிரிய ராஜா, மனாசே ராஜாவை வெண்கலச் சங்கிலியால் கட்டிச் சிறைபிடித்துச் சென்றபோது அவன் மிகவும் தன்னைத் தாழ்த்தி தேவனிடம் வேண்டி முறையிட்டுக் கொண்டான். அப்போது தேவன் அவனுக்கு இரங்கி, திரும்ப அவனை எருசலேமின் ராஜ்ஜியத்திற்கு வரப்பண்ணினர் என்று வாசிக்கின்றோம். அப்போதுதான் கர்த்தரே மெய்யான தேவன் என்று மனாசே அறிந்தான் (2நாளா.33:11-13) அன்பானவர்களே! நீங்கள் ஒருவேளை கர்த்தரை விட்டு விலகியிருந்தால் இப்போதே அவரிடம் திரும்புங்கள். அவர் மாத்திரமே உங்களை மீட்டு உயர்ந்த ஸ்தானத்தில் வைக்க வல்லவராயிருக்கிறார். இதற்கு மாறாக, ஆகாஸ் என்ற ராஜா தான் நெருக்கப்பட்டும் கர்த்தரிடம் தன்னைத் தாழ்த்தாதபடியினால் அழிந்து போனான் (2நாளா. 28:19-22) அதனால் தான், அகந்தை மனுஷனைத் தாழ்த்தும், மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் என்கிறான் ஞானி சாலமோன்.

ஆண்டவர் இயேசுவின் உபதேசம் மிக உன்னதமானது. தாழ்விலிருப்பவரை உயர்த்தக்கூடியது. இவ்வுலகம் பெருமையைக் கற்றுத் தந்து மனுஷனை அழிவிலும் குழப்பத்திலுமே தள்ளிவிடும். என்னிடத்தில் **இடறல் அடையாதவன் பாக்கியவான்** என்ற இயேசுவின் வார்த்தைகளை நம்பி அவரைப் பின்பற்றுவோம். மேன்மையடைவோம்.

**தேவ ஆசீர் அனைவருக்கும் உண்டாவதாக !** ★

## நாளும் நடப்பும்

- **பள்ளிகளில் கரும்பலகைக்குப் பதிலாக ஸ்மார்ட் போர்டுகள் அறிமுகம்.**
  **- மத்திய அமைச்சர்**

- **மருத்துவ சிகிச்சைக்காக 2லட்சம் வெளிநாட்டவர் இந்தியா வந்துள்ளனர்.**
  **- உள்துறை அமைச்சகம்**

- **செல்லாத ரூபாய் நோட்டுகளை எண்ணும் பணி இன்னும் தொடர்கிறது.**
  **- ரிசர்வ் வங்கி**

- **ஓட்டுநர் உரிமத்துக்கு முகவரி, வயது சான்றாக ஆதார் ஏற்கப்படும்.**
  **- மத்திய அரசு**

- **நீட் தேர்வு தமிழ் உள்பட 10 மொழிகளில் கேள்வித்தாள். 2018 ற்கான தேர்வு. விண்ணப்பிக்க கடைசி நாள் மார்ச் 9, தேர்வு மே 6, ஆதார் அவசியம்.**

